**சமுர்த்தி தேசிய அபிவிருத்தி நிதியம் - 2017**

---------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

சமுர்த்தி தேசிய அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் ச்ட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை எனக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் ஒரு அபிப்பிராயத்தினை தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியம் தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தில் நிதி அறிக்கையிடல் நடைமுறையை மேற்பார்வை செய்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிலையத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிலையத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

### 1.5. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டிற்காக கொடிகளை அச்சிடுவதற்காக ரூபா 3,242,125 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அச்செலவில் நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,923,909 பணம் மாத்திரம் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,318,215 பணத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விலைப்பட்டியலைத் தீர்த்து வைத்தல் நிதிப்பிரிவின் மூலம் இடம்பெற்றுள்ளதனால் சமூர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி மன்றத்தின் கணக்குகளுக்கு உள்ளடக்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய செலவுகள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான கொடி அச்சிடல் செலவுகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 3,937,065 தொகையான கொடி வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ரூபா 3,937,065 தொகையான வருமானம் உரிய ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்வது சிக்கலானதாகும். | ஆண்டிற்குரிய வருமானத்தை கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 3,875,106 தொகையான காசு மீதி மற்றும் திரண்ட நிதிய மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கான எந்த சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கொடி அச்சிடல் செலவுகளுக்கான பங்களிப்பு பணத்தை முறைப்படியாக முகாமைமைத்துவம் செய்து பேணுவதற்காக தனியான ஒரு கணக்கினை ஆரம்பித்தல் பொருத்தமானது என சமூக அபிவிருத்தி குழுக் கூட்டத்தின் போது திர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க 2016-11-01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட ‘‘திவினெகும தேசிய சமூக அபிவிருத்தி மன்றம்’’ என்ற பெயரிலான கணக்கிற்காக பொதுவைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 3,875,106.24 பணம் செலவு வைக்கப்பட்டது. | நிதியத்தின் மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | கொடி நிகழ்ச்சித்திட்டத்திற்காகவும் காட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காகவும் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,403,372 செலவினை உறுதிப்படுத்:தும் விலைப்பட்டியல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதியத்திற்குரிய வவுச்சர் கோவைகள் கணக்காய்விற்கச் சமரப்ப்பிக்கப்பட்டுள்ளன. | செலவுகளை உறுதிப்படுத்தும் விலைப்பட்டியல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**1.6. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரணமாங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| நிதிப்பிரமாணம் 381(1) | 2017 ஆம் ஆண்டிலிருந்து வங்கி நடைமுறைக் கணக்கு பேணப்பட்டிருந்தும் இந்த அறிக்கைத் திகதி வரை அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | 2017 இன் 2 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச்சட்டத்தின் 45 ஆம் பிரிவிற்கு இணங்க நிதியம் (கணக்கு) முன்னரைப் போலவே பேணப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 375,020 பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது..

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஆண்டின் போது ரூபா 3,242,125 செலவு செய்து கொடி அச்சிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் இப்பெறுகையின் வெளிப்படைத் தன்மை சட்ட ரீதியான தன்மை, மற்றும் பொருளாதார தன்மை தொடர்பான நடைமுறையினைப் பரீட்சிப்பதற்காக எந்த ஆவணமும் நிதியத்திடம் காணப்படவில்லை. | உரிய செயற்பாடுகளுக்கான பெறுகை நடவடிக்கை நிதிப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் சமூக அடிப்படை பிரிவிடம் அதன் ஆவணங்கள் எதுவும் இல்லை. | திணைக்களத்தினால் இந்த நிதியத்தை சமூக அடிப்படைப் பிரிவிற்கு ஒப்படைக்கும் போது உரிய அனைத்து ஆவணங்களும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் அவற்றினை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதியத்தின் யாப்பின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் வருடாந்தம் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2023 மே 22 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிதியத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். |